கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/ இரண்டாம் அரையாண்டுப் பொது/ சிறப்புக் கலைமாணித் தேர்வு

2013/2014 (நவம்பர்/ டிசெம்பர் 2016)

## TL/S 3213 Contemporary Sri Lankan Tamil Literature

LIBRARY
0 4 MAY 20
EASTERN UNIVERSITY

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. "1950 களின் பிற்பகுதியிலிருந்து ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றிற் புதியதொரு சகாப்தம் தொடங்குகிறது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

2. காலகட்ட அடிப்படையில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிப் போக்குகள் பற்றிப் பரிசீலிக்குக.

(25 புள்ளிகள்)

3(அ) ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முக்கிய பண்புகள் யாவை?

(10 புள்ளிகள்)

(ஆ) ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பிரதான வளர்ச்சிக் கட்டங்களை வகுத்துக்காட்டி, சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

4. நவீன ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புதிய செல்நெறிகள் தோற்றம் பெறுவதில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆற்றிய பங்களிப்புக் குறித்து விளக்குக.

(25 புள்ளிகள்)

5. "ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் இலக்கிய சஞ்சிகைகளின் செல்வாக்குக் கணிசமாகவுள்ளது." ஆராய்க

(25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) ஈழத்தில் நவீன தமிழ் இலக்கிய விமர்சனம்.

(ஆ) ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள்.

(இ) டானியலின் நாவல்கள்.

(ஈ) மறுமலர்ச்சிச் சஞ்சிகைகள்: ஒரு மறுமதிப்பீடு

(உ) இருபதாம் நூற்றாண்டு ஈழத்து நாடக வளர்ச்சிப் போக்குகள்.

(12 ½ x 2 புள்ளிகள்)